மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

முயற்சியாண்மைக்கல்வி **Entrepreneurship Studies**	மூன்று மணித்தியாலம் 10 நிமிடங்கள் **Gr - 10**	63	T	I,II

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .

பகுதி I

1) சுயநம்பிக்கையும் அர்பணிப்பும் கொண்டு புத்தாக்கம் புரிந்து மாற்றமொன்றை ஏற்படுத்தும் தனிநபர் யார்?

1. முயற்சியாளர் 2. வணிகர் 3. உரிமையாளர் 4. முகாமையாளர்

2) முன்னர் எதிர்பார்க்கப்பட்ட விடயமொன்றின் காரணமாக அல்லாமல் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் உருவாகிய புத்துருவாக்கமாக கொள்ளக் கூடியது எது?

1. மின்சார புகையிரதம் 2. மின்குமிழ் 3. டிஜிட்டல்கமரா 4. கிராமபோன்

3) பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் முழுநேர முதியோர் இல்லம் போன்ற புத்துருவாக்கம் இடம் பெறுவதற்கான சரியான காரணமாக கொள்ளத்தக்கது.

1. அறிவை மையமாகக் கொண்ட எண்ணக்கரு 2. எதிர்பாராத நிகழ்வுகள்

3. மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றம் 4. சந்தையில் ஏற்படும் மாற்றம்

4) வணிகமொன்றின் நிதிசார் இலாபம் மற்றும் நட்டஇடர் என்பவற்றிற்கிடையிலான தொடர்பு

1. நட்டஇடர் உயர்வு எனின் இலாபம் குறைவாகக் காணப்படும்.

2. நட்டஇடர் உயர்வு எனின் இலாபம் உயர்வாகக் காணப்படும்.

3. நட்டஇடர் மற்றும் இலாபம் இரண்டும் சம அளவில் காணப்படும்.

4. நட்டஇடர் குறைவு எனின் இலாபம் அதிகமாக காணப்படும்.

5) A - தொட்டுணரக்கூடியவை

B - களஞ்சியப்படுத்த முடியாது.

C – வழங்குனரிடம் இருந்து பிரிக்க முடியாது.

D – ஒரே தன்மை கொண்டவை பாதுகாக்க முடியும்.

மேற்படி கூற்றுக்களின் பொருட்கள் (பண்டங்கள்) கொண்டிருக்கக் கூடிய பண்பாக அமையும் விடைத் தொகுதி எத?

1. A மட்டும் 2. A, B மட்டும் 3. A, C மட்டும் 4. A, D மட்டும்

Past Papers Wiki

6) வணிகருக்கும் முயற்சியாளருக்குமிடையிலான ஒற்றுமைப் பண்பாகக் கருத முடியாதது?

1. பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடல்
2. நட்ட இடரிற்கு முகங்கொடுத்தல்
3. வளங்களைப் பயன்படுத்தல்
4. புத்தாக்கம் புரிதல்

7) முயற்சியாண்மை செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் இலாபம் உழைப்பதனையும் நோக்கமாக கொண்டிருக்கும் முயற்சியாளராகக் கருதச்கூடியவர்.

1. சமூக முயற்சியாளர்
2. வணிக முயற்சியாளர்
3. உள்ளக முயற்சியாளர்
4. அக முயற்சியாளர்

8) பின்வரும் வணிகச் செயற்பாடுகளை அவதானித்து அவற்றுள் நிறுவனத்திற்கு பலமாக அமையக்கூடிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

A. குறைந்தளவான வளங்களைக் கொண்டு வணிகத்தை ஆரம்பிக்க முடிதல்

B. வணிகச் செயற்பாடுகளுக்கு அரச ஊக்குவிப்பு கிடைத்தல்.

C. தொழிநுட்ப அறிவுமிக்க ஊழிய வளம் கிடைத்தல்.

D. போட்டியாளர் விலகிச் செல்லுதல்

E. திறமையான முனாமையாளர் வணிகத்தில் பணியாற்றுதல்.

1. A,B,C,D,E வணிகத்திற்கு பலமாக அமைதல்
2. A,C,E வணிகத்திற்கு பலமாக அமைதல்
3. B, D வணிகத்திற்கு பலமாக அமைதல்
4. A,C,E வணிகத்திற்கு பலமாக அமைதல்

9) வணிகத்திட்டம் தயாரித்தல் மற்றும் திட்டத்திற்கு ஏற்றவாறு செயற்பாடுகள் நடைபெறுகின்றதா என்பதனை அவதானித்தாலானது முயற்சியாளரின் எவ்வகையான வகிபங்காகும்?

1. தலைவர்
2. முகாமையாளர்
3. உரிமையாளர்
4. வணிகர்

10) பின்வரும் இரு தொகுதிகளும் முறையே திறன்கள் மற்றும் செயற்பாடுகளைக் காட்டுகின்றது. இவற்றை சரியாக இணைப்பு செய்தால் பெறப்படும் சரியான விடைத்தொகுதி.

A	B
1. எண்ணக்கரு ரீதியான திறன்	A. தகவல் பரிமாற்றம் செய்தல்
2. முன்மாதிரியாக செயற்படும் திறன்	B. புதிய சந்தை வாய்ப்பைத் தேடல்
3. தொடர்பாடல் திறன்	C. உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்
4. ஆலோசனைத் திறன்	D. முரண்பாடுகளைத் தீர்த்தல்

1. B, C, A, D
2. B, C, D, A
3. A, B. D, C
4. B, D, A, C

11) "சர்வதேச உடன்படிக்கைகளை அரசு மேற்கொள்ளும்போது உள்நாட்டு வணிகர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது." இக்கருத்திற்கு பொருத்தமான புறச்சுழல் காரணியாக அமைவது

1. பொருளாதார சூழல்
2. அரசியல் மற்றும் சட்டச் சூழல்
3. பூகோளச் சூழல்
4. அண்மிய சூழல்

12) வணிக நடவடிக்கை ஒன்றிற்கு வாய்ப்பாக அமையக்கூடிய பொருளாதார சூழற் காரணி எது?

1. அரசு கடன்களுக்கான வட்டி வீதத்தை குறைத்தல்
2. சிறுவர் சனத்தொகை அதிகரித்துச் செல்லுதல்
3. வணிக நடவடிக்கையின் உற்பத்திப் பொருளை மக்கள் அதிகம் விரும்புதல்.
4. இணையச்சேவை வளர்ச்சியடைதல்

13) தற்போதைய (நவீன) வணிகச்சுழலில் காணக்கூடிய பிரதான பண்பு

1. தேவைகள் விருப்பங்கள் எளிமையாக காணப்படல்
2. நுகர்வோர் பலமுடையவராக காணப்படல்
3. சந்தை சிறிய பிரதேசத்திற்கு வரையறுக்கப்படல்
4. இலாபம் உழைத்தல் மட்டுமே நோக்கமாகக் காணப்படல்.

14) மனித வளம் கூடுதலாக பயன்படுத்தப்படுவதன் மூலம் இலங்கைக்கு அதிகளவான வெளிநாட்டு வருவாயை பெற்றுத் தருவது.

1. ஆடைக்கைத்தொழில்
2. தேயிலைக் கைத்தொழில்
3. இறப்பர் உற்பத்தி
4. சுற்றுலா கைத்தொழில்

15) நீரிழிவு நோயாளர்களுக்காக விசேடமான உணவு, பானங்களை உற்பத்தி செய்வதானது

1. புதிய பொருட்களை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தல்
2. பாவனையிலுள்ள பொருளை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தல்
3. புதிய பொருளை புதிய சந்தையில் முன்வைத்தல்
4. பாவனையிலுள்ள பொருளை புதிய சந்தையில் முன்வைத்தல்

16) "கொலஸ்ரோல் நோயாளர்களினை" இலக்கு வாடிக்கையாளராக கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய உணவு உற்பத்திப் பொருளாகக் கருதக்கூடியது?

1. ஆடையற்ற பால்மா உற்பத்தி
2. குரக்கன் மாவிலான உணவு உற்பத்தி
3. முழுஆடைப்பால்மா உற்பத்தி
4. கச்சான், கோதுமையைக் கொண்ட பேக்கரி உற்பத்திகள்

17) "இயற்கை சுழலில் இருந்து பெறுகின்ற வளங்களை அதே வடிவில் நுகர்தல் ஆரம்ப வணிகத் துறையாகும்." ஆரம்ப வணிகத்துறையில் உள்ளடங்குகின்ற வணிகங்களின் விடைத்தொகுதி எது?

1. சுண்ணக்கல் அகழ்வு, வங்கிச்சேவை, அரிசிமா உற்பத்தி
2. மலர்ச்செய்கை, இரத்தினக்கல் அகழ்வு, மீன்பிடி
3. நன்னீர் மீன்வளர்ப்பு, மேம்பாலம் அமைத்தல், தோல் உற்பத்தி
4. காப்புறுதிச் சேவை, வீதி அமைத்தல், கோழி வளர்ப்பு

PAST PAPERS WIKI

18) இலங்கையின் கலாசார வளமாகக் கருதக்கூடியது

1. சிகிரியா ஓவியம்
2. யால, குமண சரணாலயம்
3. கசூரினா கடற்கரை
4. இல்மனைற், பளிங்கு கற்கள்

19) புதிய பொருள் அல்லது சேவையை நடைமுறைச் சந்தையில் முன்வைப்பதற்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது.

1. வளி மண்டலத்திற்கு போக்குவரத்து செய்யக்கூடிய மோட்டார் வாகன உற்பத்தி
2. ATM அட்டையின்றி ATM இயந்திரத்தில் பணம் பெறல்
3. கட்டளைகளைப் பெற்று வீட்டிற்கு அல்லது நிறுவனத்திற்கு பொருட்களை விநியோகித்தல்
4. வயதான தோற்றத்தைக் குறைக்க மாத்திரைகளை உற்பத்தி செய்தல்

20) புதிய உற்பத்தியொன்றை முன்வைப்பதற்கான SCAMPER மாதிரியில் A குறிப்பது,
(1) மாற்றீடு செய்தல் (2) பெரிதாக்குதல் (3) தொடர்புபடுத்தல் (4) சிறிதாக்குதல்

21. வணிக எண்ணம் உருவாகுவதற்கு அடிப்படையான மூலமாக கருத முடியாதது.

1. சந்தை ஆராய்ச்சி
2. பொழுதுபோக்கு விருப்பம்
3. தனிநபர் ஆற்றல் அனுபவம்
4. சட்டதிட்டங்களுக்கு உட்படல்

22. "வணிக உலகில் பொருட்களின் தன்மைகள் மாற்றமடைந்து புதிய பொருட்கள் சந்தையில் அதிகரித்துள்ளது." இதற்கு பொருத்தமான காரணமாகக் கொள்ளக்கூடியது?

1. மனிதனுடைய விருப்பங்கள் வேகமாக மாற்றமடைகின்றமை.
2. சூழல் வேகமாக மாற்றமடைதல்
3. தேவைகள் வேகமாக மாற்றமடைதல்
4. வணிக நிறுவனங்கள் மாற்றமடைதல்

23. ஆக்கவுரிமை சான்றிதழ் தொடர்பில் ஏற்றுக்கொள்ளமுடியாத கூற்று

1. புதிய கண்டுபிடிப்புக்களின் உடைமைக்கு உத்தரவாதம் தரவல்லது.
2. செல்லுபடியாகும் காலம் 20 வருடங்கள்
3. புதிய கண்டுபிடிப்புக்களை சந்தைக்கு அறிமுகம் செய்வதற்கு இது அவசியமானதல்ல.
4. உடைமையாளர் தனது கண்டுபிடிப்பினை பிறருக்கு விற்பனை செய்ய முடியாது.

24. "வணிகர் ஒருவரால் முன்வைக்கப்படும் உற்பத்தியானது போட்டியாளரது உற்பத்திப்பண்டங்களை விட சற்று சிறப்பானதாக இருந்தது." வணிகப் பிரவேசத்தில் இது எத்தகைய உபாய மார்க்கத்தைக் காட்டுகின்றது?

1. சந்தை இடைவெளி
2. புத்துருவாக்கம்
3. உற்பத்தி வேறுபாடுகள்
4. விசேட புதிய பொருள்

25. சிவா என்பவர் திருநெல்வேலி சந்தையில் வாராந்தம் மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றார். மழை காரணமாக மரக்கறிப் பற்றாக்குறை, விலையேற்றம் ஏற்பட்டமையினால் ஏனைய போட்டியாளர்கள் சந்தைக்கு சமூகமளிக்காமையானது சிவா வணிகத்திற்கு,

1. பலம்
2. பலவீனம்
3. வாய்ப்பு
4. அச்சுறுத்தல்

(25 புள்ளிகள்)

பகுதி II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(1)

1. 'முயற்சியாண்மை' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
2. பின்வரும் தெளிவுபடுத்தலுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்பினை பெயரிடுக.
   a) ஏதிர்காலத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கின்ற கனவு
   b) இயற்கையாக உருவானவை தவிர்ந்த நாம் அனைவரும் பயன்படுத்துகின்ற சகல பொருட்கள் சேவைகளும்
3. பின்வரும் உருப்படிகளை எவ்வாறு நன்மை தரக்கூடிய ஆக்கமாக மாற்றலாம்? இரு உதாரணங்களை தருக.
   a) கழிவுப்பொருள் குவியல்
   b) பத்திரிகைத்தாள்
4. புத்துருவாக்கம் இடம் பெறும் முறைகள் நான்கும் எவை?
5. தனிநபரிடம் காணப்படும் ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ளக் கூடிய நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(2)

1. வணிகங்களின் பண்புகள் நான்கினை குறிப்பிடுக.
2. வணிகம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
3. தேவைகளையும் விருப்பங்களையும் வேறுபடுத்துக.
4. பின்வரும் தேவைகளுக்கான விருப்பங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.
   உணவு ⟶
   உடை ⟶
   உறையுள் ⟶
   கல்வி ⟶
5. உமது பிரதேசத்தில் காணப்படும் சமூகமுயற்சியாளர் ஒருவரைக் குறிப்பிட்ட, அவரால் சமூகத்திற்கு வழங்கப்படும் இரு சேவைகளைத் தருக.

(10 புள்ளிகள்)

(3)

1. ஒருவர் முயற்சியாண்மை செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் அவருக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் நான்கினை தருக.
2. பின்வரும் செயற்பாடுகள் முயற்சியாளனின் எவ் வகிபாகத்தினை காட்டுகின்றது.
   a) வணிகத்திற்கு தேவையான மூலதனத்தை இடுதல்
   b) வணிகத்திட்டம் தயாரித்தல்
   c) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
   d) வணிக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

Past Papers Wiki

3. வணிகர் மற்றும் முயற்சியாளர் ஆகியோரை பண்பு ரீதியாக வேறுபடுத்துக.
4. முயற்சியாண்மை செயற்பாட்டினால் ஒரு தேசிய பொருளாதாரம் பெற்றுக்கொள்ளும் நான்கு நன்மைகளை தருக.
5. "தன்னாதிக்கமுள்ள சுதந்திர பொருளாதாரம்" என்ற கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(4)

1. வணிகத்தை பருமன் அடிப்படையில் வகைப்படுத்துக.
2. சிற்றளவு வணிகமொன்றின் பண்பகள் நான்கு தருக.
3. சிற்றளவு வணிகங்கள் ஏன் தோல்வியடைகின்றன என்பதற்கான நான்கு காரணங்களை இனங்கண்டு எழுதுக.
4. ஒரு முயற்சியாளன் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.
5. "சிற்றளவு வணிகத்திற்கும் முயற்சியாண்மைக்கும் நெருங்கிய தொடர்புண்டு" இக்கூற்றுக்கு பொருத்தமான கருத்துக்கள் இரண்டினை தருக.

(10 புள்ளிகள்)

(5)

1. வணிகச் சூழல் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
2. வணிகச்சூழலின் வகைகளை பாய்ச்சல்கோட்டு வரைபில் காட்டுக.
3. பின்வரும் விடயங்கள் புராதன வணிகச்சூழல் சார்ந்தவையா? , நவீன வணிகச்சூழல் சார்ந்தவையா? என்பதனை அவதானித்து விடை எழுதுக.

   a- போட்டி அதிகமாக காணப்படல்

   b- வணிகர் பலமுடையவராய் இருத்தல்

   c- இலாபம் உழைத்தல் முக்கிய குறிக்கோளாகக் காணப்படல்

   d- உலகம் பூராகவும் சந்தை விரிவடைந்த காணப்படல்
4. வணிகச்சூழல் தொடர்பான பின்வரும் செயற்பாடுகள் அவ்வணிகத்திற்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை ஆராய்ந்து எழுதுக?

   a- முகாமையாளர் திட்டமிடலை சரிபார்க்க தவறுதல்

   b- வேலையாட்களுக்கிடையே குழு ஒற்றுமைப்பாங்கு காணப்படல்

   c- உரிமையாளர் பெருமளவான சேமிப்பை முதலீடாக மாற்றுதல்

   d- அர்ப்பணிப்புள்ள ஊழியவளம் கிடைத்தல்
5. நீர் ஒரு முயற்சியாளர் என்ற சிந்தனையில் பின்வரும் இரு துறைகளிலும் உருவாகக்கூடிய வணிகவாய்ப்பக்கள் இரண்டினை தருக.

   a-சுற்றுலாத்துறை

   b-விவசாய நடவடிக்கை

(10 புள்ளிகள்)

(6)

1. முயற்சியாளன் ஒருவன் வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது மேற்கொள்ளவேண்டிய தீர்மானங்கள் நான்கினைத் தருக.
2. ஆடை வணிக நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.
3. பின்வரும் உற்பத்திப் பொருட்களுக்கான இலக்கு வாடிக்கையாளரை இனங்கண்டு எழுதுக.

   a- புத்தகப்பை-.....

   b- கிரிக்கட் உபகரணம் - .....

   c- தங்க ஆபரணங்கள் - .....

   d- வெள்ளைப்பிரம்பு -.....
4. வணிக எண்ணங்களையும் வணிக வாய்ப்புக்களையும் வேறுபடுத்துக.
5. "பல்வேறு வணிக எண்ணங்கள் தோன்றினாலும் பொருத்தமான ஒரு எண்ணமே தெரிவு செய்யப்படும்" சிறந்த வணிக எண்ணத்தை தெரிவு செய்வதற்கான மூன்று படிமுறைகளும் எவை?

(10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library